STC.No. 900/2022
நாள் 24.11.2025.
P.W.3 – ( சீத்தாராம்)
எதிரி ஆஜரில்லை. புகார்தாரர் ஆஜரில்லை. இணையவழி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.
புகார்தாரர் தரப்பில் **முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் எங்கள் வங்கி சிவகாசி கிளை எதிர ராமசந்திரன் அவர்களின் சேமிப்பு கணக்கு எண்.705044765–ன் 2006ம் ஆண்டு துவங்கப்பட்டதால் அது துவங்கப்பட்டதற்கான விண்ணப்பம் வங்கியில் காணப்படவில்லை. அந்த வங்கி கணக்கு 29.04.2006 அன்று துவங்கப்பட்டது. அந்த விபரத்தை நான் சான்றொப்பம் இட்டு தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.2** ஆகும். நான் முந்தைய விசாரணையில் சொன்னதுபோல் வங்கி கணக்கு துவங்கும் விண்ணப்பம் போன்ற ஆவணங்கள் 3ம் தரப்பினருக்கு 2019ம் ஆண்டிற்கு பின்னர் தான் வழங்கப்படுகின்றது. எதிரியின் வங்கி கணக்கு 2006ம் ஆண்டே துவங்கப்பட்டதால் 3ம் தரப்பினருக்கு வழங்கப்படவில்லை. எனினும் வங்கி கணக்கு துவங்கப்பட்டு சுமார் 20 ஆண்டுகள் ஆகிவிட்டதால் அந்த விண்ணப்ப படிவம் வங்கி பதிவேற்றம் செய்யப்பட்ட இமேஜ் எங்கள் வங்கி கணினியில் உள்ளது. அதனை சான்றொப்பம் இட்டு தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.3** ஆகும். சா.சா.ஆ.1 கையொப்பத்திற்கும் அதில் இருந்து 15 ஆண்டுகள் கழித்து வழங்கப்படும் காசோலையில்உள்ள கையொப்பத்திற்கும் வேறுபாடு இருக்க வாய்ப்புள்ளது என்றால் சரி. பு.சா.ஆ.1 காசோலைக்கு சா.சா.ஆ.3 மாதிரி கையொப்பத்திற்கும் அதன் அடிப்படையில் வேறுபாடு எழ வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை விரைவு நடுவர்,
திருவில்லிபுத்தூர்.